கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.24/2021** தேதி: **04.02.2026**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (முருகன், த/பெ.அருணகிரி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) ராஜகுமாரி மற்றும் பன்னீர் செல்வம் ஆகியோர் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு சொத்தில் அனுபவ பாத்தியம் உள்ளது என்று நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு சொத்தானது வாதிக்கு பாத்தியமானது என்றால் சரிதான். நான் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து பொறுத்து வாதி மற்றும் வாதி குடும்பத்திற்கு எதிராக பல வழக்குகள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(2) வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் அனைத்தும் என் வசத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அது போல் வாதி மற்றும் வாதி குடும்பத்திற்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்திற்குமான அசல் ஆவணங்கள் என் வசத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு எதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

(3) இவ்வழக்கில் வழக்கு தன்மையை அறிந்து தான் எதிர் உரையில் கையொப்பம் இட்டேனா அல்லது வழக்கறிஞர் தயார் செய்த எதிர் உரையில் கையொப்பம் இட்டேனா என்றால் வழக்கு தன்மையை அறிந்து தான் கையொப்பம் இட்டேன்.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:02:46 +0530

வாதிகளின் ஆவணங்கள் என் வசம் இருப்பது பற்றியும் விற்கிரைய ஒப்பந்தம் இருப்பது பற்றியும் நான் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் வாதிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிராக 2021 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(4) 18.01.2021 ல் வாதியின் குமாரர் வேல்முருகன் கந்துவட்டி சட்டத்தின் கீழ் என் மீது புகார் அளித்தார் என்றால் சரிதான். அந்த புகார் தொடர்பாக விசாரணைக்ககு நானும் எனது மணைவியும் காவல் கண்காணிப்பாளிடம் ஆஜரானோம் என்றால் சரிதான். அந்த விசாரணையின் போது என் வசம் உள்ள அனைத்து ஆவணங்களின் அடிப்படையில் தான் வாதி மற்றும் வாதி குடும்பத்தினர் மீது அனைத்து வழக்குகளையும் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

(5) அந்த விசாரணை நடைமுறையில் இருக்கும்போது 2021 பிப்ரவரி மாதம் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த சமயம் விசாரணை முடிந்துவிட்டது. எப்போது விசாரணை முடிந்தது என்றால் ஜனவரி மாதம் முடிந்தது தேதி ஞாபகம் இல்லை. எனக்கும் எனது மணைவி உஷா விற்கு எதிரான புகாரானது ஜீன் 2021 ல் மாவட்ட குற்ற பிரிவுக்கு மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த சமயம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றுகுறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

(6) மேலும் நான் தாக்கல் செய்திருந்த வழக்கிற்கான நகலை காவல் நிலையத்தில் சமர்பித்தேன் என்றால் சரிதான். இந்தவழக்கில் சொல்லப்பட்ட சொத்தைப்பொறுத்து விற்கிரைய ஒப்பந்தம் மற்றும் பல ஆவணம்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:02:52 +0530

நான்தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்தவழக்கில் சொல்லப்பட்ட சொத்தினை பொறுத்து முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 128/2021 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு எனக்கும் வாதிக்கும் ஏறப்பட்ட விற்கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(7) அந்த வழக்கை நான் வாதிக்கு எதிராக ரூ.30 லட்சம் முன்பணம் செலுத்தி பவர் பத்திரம் வாங்கி விட்டதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய அசல் பொது அதிகார பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. அதில் நான் ரூ.16 லட்சம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

(8) எனக்கு சொத்துக்களை வாங்க விற்க உள்ள நடைமுறைகள் தெரியும் என்றால் சரிதான். ஓரளவு தெரியும். அவ்வாறு பவர் பத்திரத்தில்குறிப்பிடாத சங்கதிகளை தற்போது நீதிமன்றத்தில் மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. இது போல் வாதியின் கணவர் மீதும் அசல் வழக்கு எண் 127/2021 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(9) அது போலவே வாதியின் மகன் வேல்முருகனுக்கு எதிராக அசல் வழக்கு வழக்கு எண் 55/2021 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது ரூ.45 லட்சம் கொடுத்ததாக சொத்து உரிமைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:02:58 +0530

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை  ஒத்திவைக்கப்படுகிறது .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:03:02 +0530

***Additional District Munsif , Cuddalore.***